# திருக்குறள் முன்னிறுத்தும் பொதுவுடைமைச் சமூக வாழ்வியல்

# Thirukkural advocates communal social life

**Aruna.R**, Assistant Professor, Department of Tamil, P.S.G.R. Krishnammal College for Women (Autonomous), Coimbatore.

**அருணா.** ரா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்.

**ORCID:** https://orcid.org/**0009-0003-2364-4124**

**DOI: 10.5281/zenodo.13955078**

## Abstract

Innumerable studies, texts, interpretations etc. have been published on Thirukkural from various angles. It mainly speaks of virtue for the people without construing any sign of authority as sacred. Thirukkural continues to be symbolized as a representation of bioethics. At the same time, there is an environment where religions claim Thirukkural as their own. Moral thinking is produced for the benefit of power. It weaves the psychology of those under power to suit power. Thirukkural rejects this thinking and demands adherence to the values of primitive communal social life. It is not only for Tamils but also for the entire world. However, there is a problem in identifying Thiruvalluvar among world literature. The European mind, which does not accept a Third World country as a great thinker, is reluctant to accept Kural as world literature. The situation is similar in the Indian context. This article examines the problem of identifying Thiruvalluvar as a significant thinker of world literature and the thought expressed in this text.

## ஆய்வுச்சுருக்கம்

திருக்குறள் குறித்து எண்ணற்ற ஆய்வுகள், உரைகள், விளக்கங்கள் போன்றவை பல கோணங்களில் வெளிவந்துள்ளன. முக்கியமாக எவ்வித அதிகார அடையாளத்தையும் புனிதமாகக் கட்டமைக்காமல் மக்களுக்கான அறத்தைப் பேசுகிறது. திருக்குறள் உயிர்ம நேயத்தை முன்வைக்கும் பிரதியாகத் தொடர்ந்து அடையாளப்படுத்தப்பட்டு வருகிறது. அதேசமயம் மதங்களும் திருக்குறளை தங்களுக்கானதாக வரித்துக்கொள்ளும் சூழலும் நிலவிவருகின்றன. அறச்சிந்தனை அதிகாரத்தின் நலனுக்காக உற்பத்தி செய்யப்படுகிறது. அது அதிகாரத்திற்கு உட்பட்டவர்களின் உளவியலை அதிகாரத்திற்கு ஏற்றாற்போல்

நெய்கிறது. இந்த சிந்தனையை திருக்குறள் மறுதலித்து அது ஆதிப்பொதுவுடைமைச் சமூக வாழ்வியலின் விழுமியங்களைக் கடைபிடிக்கக் கோருகிறது. இது தமிழுருக்கானதாக மட்டும் இல்லாமல் உலக முழுமைக்குமானதாக விரிந்து நிற்கிறது. இருப்பினும் உலக இலக்கியவாதிகளுள் திருவள்ளுவரை அடையாளப்படுத்திக் கொள்வதில் சிக்கல் நிலவுகிறது. மூன்றாம் உலக நாட்டைச் சார்ந்த ஒருவரை சிறந்த சிந்தனையாளராக ஏற்றுக் கொள்ளாத ஐரோப்பிய மனம் குறளை ஏற்றுக்கொண்டாலும் அதை உலக இலக்கியமாக அங்கீகரிப்பதில் தயக்கத்தைக் காட்டி வருகிறது. இந்தியச் சூழலிலும் இதே நிலைதான் காணப்படுகிறது. திருவள்ளுவர் உலக இலக்கியச் சிந்தனையாளர்களில் குறிப்பிடத்தக்கவராக அடையாளப்படுத்துவதில் நிலவும் சிக்கலையும் இப்பிரதி வெளிப்படுத்தும் சிந்தனையையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**Keywords:** திருக்குறள், திருவள்ளுவர், பின்காலனியம், பொதுவுடைமை, இலக்கியம், தமிழர்

**முன்னுரை**

திருக்குறள் என்பது தமிழர் அடையாளத்தில் நீக்கமற நிறைந்திருந்தாலும் அதை சுதேசிய நூலாக அங்கீகரிக்கும் செயல்பாடு குறைவாகவே உள்ளது. உலகத்தில் வாழும் அனைவருக்கும் பொருந்தக்கூடிய அறங்களைக் கொண்டிருப்பதாக அடையாளப் படுத்தப்பட்டாலும் உலகத் தத்துவம், அறச் சிந்தனையை முன்வைத்தவர்களின் ஒருவராகத் திருவள்ளுவரை முன்வைப்பது இல்லை. உலக அளவில் ஐரோப்பியச் சிந்தனைகளை எடுத்துரைக்கும் இன்றைய பின்னைக்காலனியச் சூழலில் திருக்குறளின் சிந்தனைத் தளத்தை அடையாளப்படுத்துவதில் சிக்கல் நீடித்து வருகிறது. திருக்குறள் உலகப் பொது அடையாளத்திற்குள் ஏன் வரவில்லை? அது எந்தச் சமூக வாழ்வியலை முன்வைக்கிறது என்பதை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**பின்காலனியச்சூழலில் திருக்குறள்**

காலனியம் என்பது நேரடியான அடக்குமுறை என்று பொதுவாக முன்வைக்கப் படுகிறது. அதேசமயம் அறிவு சார்ந்த அடக்கு முறைகள் நிகழ்த்தப்பட்டதைக் கவனித்தில் கொள்ள வேண்டியுள்ளது. பிற நாட்டின் அறிவு சார்ந்த படைப்பாளர் களையும் படைப்புகளையும் அழித்தொழித்த சூழலிலிருந்து காலனிய கட்டம் தோன்றியதாக ரமோன் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார். மேலும் அவர்,

“அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை, சமூகவியல், உளவியல் என எல்லாத் துறை சார்ந்த பாடத்திட்டங்களிலும், பயிற்சி நெறிகளிலும் இந்த ஐந்து நாடுகளின் அறிஞர்களை மட்டுமே காண்பீர்கள். உலகின் பல்வேறு மொழி, இன, மத மற்றும் கலாச்சாரப் பின்புலத்தைக் கொண்ட சமூகங்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ‘சமூகக் கலைகளை’ இந்த ஐந்து நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களின் தனியுடைமையாக

மாற்றியது எது, அது எப்போது நிகழ்ந்தது எனும் கேள்வியை ரமோன் எழுப்புகிறார்.” (மெய்ப்பொருள் வலைதளம், https://www.meipporul.in/decolonisation-in-theory-and-practice/) என்றுரைப்பதாக ஸகி ஃபெளஸ் காலனிய நீக்கம்: கோட்பாடும் நடைமுறையும் என்ற கட்டுரையில் குறிப்பிட்டுக் காட்டுகிறார். பிரிட்டீஷ் காலனிய ஆதிக்கம் தமிழ் அடையாள உருவாகத்திற்கு பங்காற்றியிருந்தாலும் (திருக்குறளை எல்லீஸ் பொதுத்தளத்திற்குக் கொண்டுவந்தது) அதை ஐரோப்பியச் சிந்தனையாளர்களுக்கு அடுத்தாகத்தான் நோக்கப்படுகிறது. இதற்குக் காரணம் ஆரியர்களின் வருகை, அவர்கள் உருவாக்கிய வர்ணம், அதிலிருந்து உற்பத்தியான சாதி. இந்த பண்பாட்டுக் காலனியம் தமிழரின் அறிவு மரபை போகியாக்கிக் கொண்டாடியது. அதனால் தமிழரின் சிந்தனைகள் ஆரியத்திலிருந்து பெறப்பட்டதாக அடையாளப்படுத்தப்பட்டது.

அதேசமயம் உரை எழுதுதலில் தமிழரின் அறிவுச் சிந்தனையைச் சமயச் சிந்தனையாக அடையாளப்படுத்தும் செயலும் மிகத் தீவிரமாகச் செய்யப்பட்டுள்ளது. திருக்குறளுக்கு உரை வகுத்தவர்களில் பரிமேலழகர் உரைதான் சிறந்தது என்று அடையாளப்படுத்தும் போக்கு இன்றளவும் காணப்படுகிறது. அவருக்கு முன்னும் பின்னும் உரையாசிரியர்கள் தோன்றியிருந்தாலும்,

“சமயம் சாராத வள்ளுவக்கருத்தை வைதீகக் கட்டுக்குள் நிறுத்திக் காட்டி, மீளமுடியாத இடத்தில் வைத்திருப்பதில் சிறந்து நிற்பவர் பரிமேலழகர். வேதம், புராணம், ஸ்மிருதிகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படும் நால்வருணக் கருத்தை, அதன் கோட்பாட்டை உரை விளக்கமாகச் செய்கின்றார் பரிமேலழகர். வள்ளுவர் குறளுக்கு பதின்மூன்று நூற்றாண்டுகளுகட்கு, பின்பு உரைகாணும் பரிமேலழகர், கால, வரலாற்று மாற்றங்களைக் கணக்கில் எடுக்காமல், தானடித்த மூப்பாக பார்ப்பனிய நால்வருண வேற்றுமைக் கொள்கையை உரைமுழுக்கத் திணிக்கின்றார்” (பரிமேலழகரின் பார்ப்பனியத் திணிப்பு, ப. 222) இவ்வாறு பரிமேலழகர் நால்வர்ணச் சிந்தனையுடன் உரை வகுத்தமையே அவரை சிறந்த ஆளுமையாக, - திருவள்ளுவரை விட – தமிழ் அறிஞர்களால் சான்றுகாட்டப்படுவதாக மு. தமிழ்க்கூத்தன் எடுத்துரைக்கிறார்.

இதனடிப்படையில், ஆரியப் பண்பாட்டுக் காலனியம் தமிழ்ச் சிந்தனை மரபை இருட்டடிப்புச் செய்து வேத மரபுச் சிந்தனையை முதன்மைப்படுத்தியது. ஆரியச் சிந்தனைதான் சிறந்தாக அடையாளப்படுத்திக்கொண்டது போல் ஐரோப்பிச் சிந்தனைதான் சிறந்தது என்று ஐரோப்பியக் காலனியம் கட்டமைத்து வைத்துள்ளது. இதனால் உலகிற்கு சிறந்த அறத்தைப் போதிக்கும் திருக்குறள் என்ற தமிழ்ச் சிந்தனை மரபு கீழைச் சிந்தனை மரபாக நிலைகொண்டுள்ளது.

**திருக்குறள் முன்வைக்கும் பொதுவுடைமை வாழ்வியல்**

மனித சமூகம் தோன்றியதிலிருந்து கிட்டத்தட்ட விவசாயம் கண்டுபிடிக்கப்பட்டு

நிலைகுடியாக வாழத் தலைப்பட்ட காலத்தில்தான் உடைமைச் சமூகம் தோன்றியது. அதற்கு முன்புவரை வாழ்ந்த வாழ்வியல்தான் பொதுவுடைமை வாழ்வியல் ஆகும். இது முழுக்க கூட்டு உழைப்பை அடிப்படையாகக் கொண்டது. தனியுடைமைச் சிந்தனையற்ற சமூகமாக நிலைகொண்டிருந்தது. இதை,

“மிகப் பழமையான காலத்தில், மனித உழைப்பு மனிதக் கூட்டங்களின் உழைப்பாக, மனிதர்களின் கூட்டு உழைப்பாகவே இருந்து வந்தது. வேட்டை ஆடுதல், மீன் பிடித்தல், கானகங்களில் அலைந்து திரிந்து காய்கனி, கிழங்குகளைச் சேகரித்தல் எல்லாமே கூட்டுச் செயல்பாடுகளாகவே இருந்தன.” (மார்க்சியம் பயில்வோம், பக். 195-196) என்று ந. முத்துமோகன் ஆதிப்பொதுவுடைமைச் சமூக வாழ்வியலை எடுத்துரைக்கிறார். சமூக வாழ்வியலுக்கும் தனிமனித வாழ்வியலுக்குள் உள்ள உறவைத் திருக்குறள் நேர்த்தியாக வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. அவ்வகையில் இந்த இரு வாழ்வியலுக்கும் பொருத்தமான அறமாக ஆதிப்பொதுவுடைமைச் சமூக வாழ்வியலைத் திருக்குறள் வலியுறுத்துகிறது.

ஆதிப் பொதுவுடைமையின் அவசியத்தை வலியுறுத்தும் குறளாக,

**“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நுலோர்**

**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.” (குறள், 322)**

என்றஇந்தக்குறள்அடையாளப்படுத்தப்படுகிறது.தனக்குமுன்பிருந்தஅறிஞர்கள்அறிந்த அறங்களில் பகுத்துண்டு வாழ்வதுதான் சிறந்த அறமாக அடையாளப்படுத்தப்படுவதாக திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். அதிலும் முக்கியமாக பல்லுயிர் என்று பல்லுயிர் தன்மையை வலியுறுத்துகிறார். இந்த உலகத்தில் தோன்றிய அனைத்து உயிர்களும் இங்கு வாழ உரிமை உண்டு. மனிதரே இயற்கையை ஆக்கிரமித்து விடக் கூடாது என்பதை இந்தக் குறளின் வழி எடுத்துரைக்கிறார்.

அதேபோல, மனிதர்களுக்குள்ளேயான வேற்றுமை, ஏற்றத்தாழ்வு என்பதும் மனிதனே சிறந்தவன் என்ற ஆதிக்கச் சிந்தனைகளும் தமிழருடையது அல்ல என்பதையும் எடுத்துரைக்கத் தவறவில்லை.

**“பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா**

**செய்தொழில் வேற்றுமை யான்” (குறள், ப. 972)**

என்று எடுத்துரைக்கிறார். இங்கும் பல்லுயிர் தன்மையில் நின்று பேசுகிறார். ‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்’ என்ற குறளை அடிப்படையாகக் கொண்டு திருக்குறள் பேச வரும் கருத்தை,

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற கருத்து, வள்ளுவரின் தலையாயச்

சிந்தனையாக, பொதுவுடைமைச் சித்தாந்தத்தை வலியுறுத்தும் சிந்தனையாக அறிஞர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. இது பிறப்பினடிப்படையிலான சமத்துவத்தை வலியுறுத்துகிறது. அனைத்து உயிர்களும் பிறப்பினடிப்படையில் ஒத்து நிற்கின்றன. பிறக்கும்போதே உயர்ந்த உடல், தாழ்ந்த உடல் என்ற வேறுபாட்டைக் கருத்து முதல்வாதத் தத்துவம் போதிக்கிறது. ஆனால் இந்த விஷயத்தில், "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (322) என்ற குறட்பாவைத் திருக்குறளின் இயங்குதளப் புள்ளியாக நோக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில், 'பிறப்பொக்கும்' என்ற கருத்தியல், தாரதம்மியங்களற்ற மனித உடல்களைப் பேசுகிறது. கருத்துமுதல்வாதத்தைப் பரிசீலனை செய்கிறது. ஆனால், 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்பது உடைமைச் சமூகத்தில் உணவில் பங்கு கோருகிறது. அச்சமூகத்தை மறுபரிசீலனை செய்கிறது. பொருள்முதல்வாதச் சமுதாயமான இனக்குழுச் சமூக வாழ்வியலுடன் பின்னிப்பிணைகிறது. உடைமைச் சமூகத்தில் உணவு அதிகாரத்தின் பிடிக்குள் செல்கிறது. அச்சமூகம் பசித்த வயிறுகளை உற்பத்தி செய்கிறது. அங்கு உணவைப் பகிர்ந்து கொடுக்கவேண்டியது பற்றிப் போதிக்கவேண்டிய அவசியத்தேவை உருவாகிறது. 'உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோரே, உண்டி முதற்றே உணவின் பிண்டம்' (புறம். 18) என்று தன் வரையிலான வரலாற்று அறிவுகளைச் சீர்தூக்கி ஆய்ந்து, நூலோர் தொகுத்த அறிவுகள் எல்லாவற்றிலும் தலையாய அறிவு 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்னும் அறிவாகும் என்று அறம் வகுக்கிறார். பல்லுயிர் என்பது மனித உயிர்களையும் பிற உயிர்களையும் குறித்து நிற்கிறது. உணவு என்பது உயிர் வாழ்தலை உறுதிபடுத்தும் நோக்கில் அனைத்து உயிர்களின் அடைப்படை உரிமை என்கிறார்." (பெயல் ஆய்விதழ், பெயல் : 03, துளி : 02, ப. 106) என்று ப. சின்னச்சாமி அடையாளப்படுத்துகிறார்.

திருவள்ளுவரது காலத்தில் பேரரசு நிலைகொண்டிருப்பது அவரது குறள்கள் வழி அடையாளப்படுகிறது. அன்றைய அரசாட்சி முறை தனியுடைமை வேட்கை கொண்டு இயங்கியிருப்பதையும் அதை மறுதலித்து மக்களின் வாழ்வியலை அரசு நோக்க வேண்டும் என்றும் அதற்கு ஆதிப்பொதுவுடைமைச் சமூக வாழ்வியல்தான் சிறந்தது என்று உரைக்கிறார்.

**"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே**

**செல்வத்தைத் தேய்க்கும் படை" (குறள், 555)**

**"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**

**சேராது இயல்வது நாடு" (குறள், 734)**

**"இரந்து உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**

**கெடுக உலகியற்றி யான்" (குறள், 1062)**

என்பது போன்ற பல குறள்கள் மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதைக் காணமுடிகிறது. இந்த சிக்கல்கள் இல்லாமல் ஒரு அரசன் ஆட்சி செய்தால் அவனை இறைவனாக மக்கள் நோக்குவர் என்று எடுத்துரைக்கிறார். இவ்வாறு அரசன் தனியுடைமைச் சிந்தனையை கைக்கொள்ளும்போது அது மக்களின் வாழ்க்கைக்கு ஒவ்வாதது. ஆதிப்பொதுவுடைமைச் சமூக வாழ்வியல்தான் சிறந்தது என்பதை முன்வைக்கிறார்.

இவ்வாறு திருக்குறள் தனியுடைமை சித்தாத்தம் நிலைகொள்ளும் காலகட்டத்தில் ஆதிப்பொதுவுடைமைச் சமூகத்தை அடையாளப்படுத்தி மக்களின் வாழ்வியல் கூட்டு உழைப்பினால் ஆனது என்றும், இவ்வுலகத்தில் அனைத்து உயிரினங்களும் வாழத் தகுதிபடைத்தது என்ற பல்லுயிர் தன்மையையும் முன்வைக்கிறது.

**முடிவுரை**

பின்னைக் காலனியச் சூழலில் ஐரோப்பியச் சிந்தனை வடிவங்களுக்கு முன்னோடியாகத் திகழும் திருக்குறளை அடையாளப்படுத்துவதில் சுதேசிய அளவில் கூட சிக்கல் நிலவுகிறது. ஆரியப் பண்பாட்டுக் காலனியம் தமிழ்ச் சிந்தனை மரபைச் சிதறடித்து அது சமயச் சிந்தனையாக அடையாளப்படுத்தி வைத்துள்ளது. இதற்குக் காரணம் திருக்குறள் முன்வைக்கும் ஆதிப்பொதுவுடைமைச் சமூக வாழ்வியல் ஆகும் என்பது உறுதிபடுகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. சின்னச்சாமி, ப., உடைமையின்மையும் உடைமையும் இணையும் கருத்துருவச் சட்டகம் – திருக்குறளை முன்வைத்து, பெயல் அரையாண்டு ஆய்விதழ், ஏப்ரல் 2017 – செப்டம்பர் 2017, பெயல் : 03 துளி : 02. பக். 104 – 113.

2. தமிழ்க்கூத்தன், மு., புலவர், 2006, பரிமேலழகரின் பார்ப்பனியத் திணிப்பு, முதல் பதிப்பு, மதுரை: கண்ணம்மா பதிப்பகம்.

3. முத்துமோகன், ந., 2018, மார்க்சியம் பயில்வோம், முதல் பதிப்பு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

4. ஸகி ஃபெளஸ், காலனிய நீக்கம்: கோட்பாடும் நடைமுறையும், மெய்ப்பொருள் வலைதளம், https://www.meipporul.in/decolonisation-in-theory-and-practice/)

**Bibliography**

1. Chinnachamy, P., A Conceptual Framework for Convergence of Possession and Non-Possessiveness – Introducing Thirukkural, Peyal Semi-Annual Review, April 2017 – September 2017, Vol. : 03 Issue : 02. Pg. 104 – 113.
2. Tamilkoothan, M., Bulavar, 2006, Paramelashagar's Parhaniya Tinippu, First Edition, Madurai: Kannamma Publishing House.
3. Muthumohan, N., 2018, Marxism Learned, First Edition, Chennai: New Century Book House (B) Lit.
4. Saki Faus, Decolonization: Theory and Practice, The Web of Science, https://www.meipporul.in/decolonisation-in-theory-and-practice/)

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**அருணா. ரா, " திருக்குறள் முன்னிறுத்தும் பொதுவுடைமைச் சமூக வாழ்வியல்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 4, இதழ் 4, அக்டோபர் 2024, பக். 1-7

**Cite this Article in English**

**Aruna.R, " Thirukkural advocates communal social life"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.4 Issue 4, 0October 2024, pp. 1-7